

# தி.மு.க. இளைஞர் அணி

## சட்டமன்ற இடைத்தேர்தல் பணி இளைஞர் அணி நிர்வாகிகளை ஒருங்கிணைக்கக் குழு

### இளைஞர் அணிச் செயலாளர் உதயநிதி ஸ்டாலின் அறிவிப்பு!

வருகிற 06–10–2026 அன்று நடைபெற உள்ள, மதுராந்தகம் மற்றும் தாராபுரம் ஆகிய சட்டமன்றத் தொகுதிகளுக்கான இடைத்தேர்தலில், மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணிக் கட்சிகளின் ஆதரவுடன் போட்டியிடும் கழக வேட்பாளர்களை ஆதரித்து நடைபெறும் பிரச்சாரப் பணிகளில் ஈடுபட உள்ள இளைஞர் அணி நிர்வாகிகளையும் இளம் பேச்சாளர்களையும் ஒருங்கிணைக்க, தலைமைக் கழகத்தின் அறிவுறுத்தலின்பேரில், மாவட்டக் கழக நிர்வாகிகளுடன் இணைந்து பணியாற்ற மாநிலத் துணைச் செயலாளர்களைக் கொண்டு கீழ்க்கண்டவாறு குழுக்கள் அமைக்கப்படுகின்றன.

| மதுராந்தகம் தொகுதி | தாராபுரம் தொகுதி |
|---|---|
| எஸ்.ஜோயல் | இன்பா ஏ.என்.இரகு |
| நா.இளையராஜா | கே.இ.பிரகாஷ் எம்.பி., |
| ப.அப்துல் மாலிக் | பி.எஸ்.சீனிவாசன் எம்.எல்.ஏ., |
| பிரபு கஜேந்திரன் | சி.ஆனந்தகுமார் |
| ஜி.பி.ராஜா | |

இவர்கள் இவ்விரு தொகுதிகளையும் சிறு சிறு பகுதிகளாகப் பிரித்துக்கொண்டு, அவற்றுக்கு தங்களுடைய மண்டலங்களுக்கு உட்பட்ட இளைஞர் அணி நிர்வாகிகளைப் பொறுப்பாளர்களாக நியமித்து, வாக்கு சேகரிக்கும் பணிகளில் ஈடுபடுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

"அன்பகம்"
தேனாம்பேட்டை
சென்னை-18
நாள் : 12.09.2026

**உதயநிதி ஸ்டாலின்**
செயலாளர்,
தி.மு.க. இளைஞர் அணி

# தந்தை பெரியார் 148வது பிறந்த நாள்!

## கழகத் தலைவர் தளபதி மு.க.ஸ்டாலின் அவர்கள் காலை 8.30 மணிக்கு அண்ணா சாலை, சிம்சன் அருகே அமைந்துள்ள தந்தை பெரியார் திருவுருவச் சிலைக்கு மாலை அணிவிக்கிறார்!

### சென்னை மேற்கு மாவட்டச் செயலாளர் நே.சிற்றரசு அறிக்கை!



பகுத்தறிவுப் பகலவன் தந்தை பெரியாரின் 148வது பிறந்த நாளை முன்னிட்டு 17.9.2026 அன்று காலை 8.30 மணிக்கு அண்ணா சாலை, சிம்சன் அருகே உள்ள தந்தை பெரியார் சிலைக்கு மாண்புமிகு கழகத் தலைவர் தளபதி **மு.க.ஸ்டாலின்**, பொதுச்செயலாளர் துரைமுருகன், பொருளாளர் **டி.ஆர்.பாலு மற்றும் முதன்மைச் செயலாளர், துணைப் பொதுச்செயலாளர்கள்** உள்ளிட்ட கழக முன்னணியினர் மாலை அணிவித்து மரியாதை செலுத்துகிறார்கள்.

கழக மாநில அமைச்சர் பெருமக்கள், முன்னாள் இந்நாள் நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், தலைமைக் கழகச் செயலாளர்கள், தலைமைச் செயற்குழு பொதுக்குழு உறுப்பினர்கள், மாவட்டக் கழக, பகுதிக் கழக, வட்டக் கழக நிர்வாகிகள், மாநகராட்சி மன்ற உறுப்பினர்கள் மற்றும் இளைஞர் அணி, மகளிர் அணி, மாணவர் அணி, இலக்கிய அணி, தொழிலாளர் அணி, வழக்கறிஞர் அணி, தொண்டர் அணி, மீனவர் அணி, ஆதிதிராவிடர் நலக்குழு, மகளிர் தொண்டர் அணி, கலை,இலக்கிய பகுத்தறிவு பேரவை, மருத்துவர் அணி, பொறியாளர் அணி, சிறுபான்மையினர் நலஉரிமைப் பிரிவு, வர்த்தகர் அணி, தகவல்தொழில்நுட்ப அணி, சுற்றுச்சூழல் அணி, அயலக அணி ஆகிய அனைத்து அணி நிர்வாகிகள் மற்றும் கழகத் தோழர்கள் தவறாது கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறேன்.

**நே.சிற்றரசு**
செயலாளர், சென்னை மேற்கு மாவட்ட தி.மு.க.

நாள்: 12.09.2026

### மைனாரிட்டி ஆட்சி முதல்வர் விஜய்யின் ஆணவப் பேச்சைக் கண்டித்து

# விழுப்புரத்தில் மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம்!

### கழக துணைப் பொதுச் செயலாளர் க.பொன்முடி கண்டன உரை!

விழுப்புரம், செப்.14-

சட்டப்பேரவையில் மைனாரிட்டி ஆட்சியின் முதலமைச்சர் விஜயின் ஆணவப் பேச்சையும் அருவருக்கத்தக்க உடல்மொழியையும் வரலாற்று சம்பவங்களை தவறாக திரித்து பதிவு செய்வதையும் கண்டித்து விழுப்புரம் மத்தியம், தெற்கு, வடக்கு மாவட்ட தி.மு.க சார்பில் மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம் விழுப்புரம், புதிய பேருந்து நிலையம் அருகில், நகராட்சி திடலில், விழுப்புரம் மத்திய மாவட்ட கழக பொறுப்பாளரும், விழுப்புரம் சட்டமன்ற உறுப்பினருமான டாக்டர் இரா.இலட்சுமணன் தலைமையில் நடைபெற்றது.

மாநில ஆதிதிராவிடர் நலக்குழு இணை செயலாளர் செ.புஷ்பராஜ் வரவேற்புரையாற்றினார். விழுப்புரம் வடக்கு மாவட்ட கழக பொறுப்பாளர் செஞ்சி K.S.மஸ்தான், விழுப்புரம் தெற்கு மாவட்ட கழக பொறுப்பாளர் டாக்டர் பொன்.கௌதமசிகாமணி ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

கழக துணை பொதுச் செயலாளர் முனைவர் க.பொன்முடி கண்டன உரையாற்றினார்.

உடன் வானூர் சட்டமன்ற உறுப்பினர் தி.கௌதம், மு.அமைச்சர் செஞ்சி N.ராமச்சந்திரன், மு.சட்டமன்ற உறுப்பினர்கள் மாசிலாமணி, அன்னியூர் சிவா, இரா.சேதுநாதன், N.சீத்தாபதி சொக்கலிங்கம், பா.செந்தமிழ்ச் செல்வன், A.மாரிமுத்து, மாவட்ட பொறுப்புக்குழு உறுப்பினர் விழுப்புரம் இரா.ஜனகராஜ் , தலைமை கழக வழக்கறிஞர் சுவை சுரேஷ், மாநில மகளிர் அணி பிரச்சார குழு செயலாளர் M.தேன்மொழி, தலைமை தீர்மானக்குழு உறுப்பினர் செஞ்சி சிவா,

மாவட்ட பொறுப்புக் குழு உறுப்பினர்கள் இரா. கண்ணப்பன், பிரேமா குப்புசாமி, தயா.இளந்திரையன், மாவட்ட துணை செயலாளர்கள் T.N. முருகன், இரா.கற்பகம், தலைமைச் செயற்குழு உறுப்பினர்கள் செல்வராஜ், அப்துல் சலாம், மாவட்ட அவைத் தலைவர் Dr.ப. சேகர், மாவட்ட பொருளாளர் N.ரமணன், மாவட்ட துணை செயலாளர்கள் ரவிக்குமார், அருணகிரி, அமுதா ரவிக்குமார், தலைமை செயற்குழு உறுப்பினர்கள் R.விஜயகுமார், L.நெடுஞ்செழியன், சீனுராஜ் மற்றும் கழக நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.

மாவட்ட ஊராட்சி குழுத் தலைவர் ம.ஜெயச்சந்திரன் நன்றி உரையாற்றினார். இந்நிகழ்வில் நகர, ஒன்றிய மற்றும் பேரூராட்சி கழக செயலாளர்கள்/ தலைவர்கள்/ நிர்வாகிகள், தலைமை செயற்குழு மற்றும் பொதுக்குழு உறுப்பினர்கள் மாவட்ட சார்பு அணி அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், உள்ளாட்சி பிரதிநிதிகள், கிளை கழக செயலாளர்கள், கிளை நிர்வாகிகள், பொது உறுப்பினர்கள், கழக செயல்வீரர்கள், வெல்லும் தமிழ் பெண்கள் மற்றும் பொதுமக்கள் பலர் கலந்து கொண்டனர்.

### விலைவாசி உயர்வு – கடும் மின்வெட்டைத் தீர்க்க வழியில்லை!

# தமிழ்நாட்டில் மக்கள் புரட்சி வெடிக்கும் நிலை ஏற்படும்!

### புதுக்கோட்டையில் முன்னாள் அமைச்சர் எஸ்.ரகுபதி பேட்டி!



புதுக்கோட்டை, செப்.14 -

நடந்து முடிந்த சட்டப் பேரவை கூட்டத் தொடரில் மிசா குறித்து பேசிய முதல்வரை கண்டித்து புதுக்கோட்டை திலகர் தேர்தலில் திமுக சார்பில் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. இதில் முன்னாள் அமைச்சர்கள் எஸ்.ரகுபதி, சிவ.வீ.மெய்யநாதன், புதுக்கோட்டை வடக்கு மாவட்ட செயலாளர் கே.கே.செல்லப் பாண்டியன், டாக்டர் வை.முத்துராஜா எம்.எல்.ஏ உள்ளிட்ட ஆயிரக் கணக்கானோர் கலந்து கொண்டு கண்டன முழக்கம் எழுப்பினர்.

பின்னர் செய்தியாளர்களை சந்தித்த முன்னாள் அமைச்சர் எஸ்.ரகுபதி,

நடிகர் விஜய் சினிமாவில் ஹீரோ, அரசியலில் வில்லன் என்று செயல்பட்டு வருகிறார்.

சட்டப்பேரவையில் அவதூறாக பேசிய முதல்வரை கண்டித்து ஆர்ப்பாட்டம் நடைபெற்றது/

சர்க்காரியா கமிஷன் வழக்கில் ஏற்கனவே குற்றம் சாட்டப்பட்டவர்கள் விடுதலை ஆகிவிட்டார்கள்.

குற்றப்பத்திரிகையை எடுத்து வைத்துக் கொண்டு அவதூறாக முதல்வர் சட்டசபையில் பேசினார்.

தீர்ப்புகள் குறித்து தான் பேசப்பட வேண்டுமே தவிர குற்றப்பத்திரிகையை வைத்துக் கொண்டு குற்றச்சாட்டை முன்வைக்க கூடாது.

அதே போன்று அமலாக்கத்துறை வழக்கில் குற்றங்கள் குறித்து கருத்துதான் தெரிவிக்கப்பட்டு உள்ளதே தவிர நீதிமன்றத்தில் வழக்கு முடிந்து தீர்ப்பு வரவில்லை.

தீர்ப்பு வந்த பிறகு அது குறித்து விமர்சனம் செய்யலாம்.

மிசா காலத்தில் எங்கள் தலைவர் எதற்காக சிறை சென்றார் என்பது அனைவருக்கும் தெரியும். எதற்காக போனார் என்று அமைச்சர் நிர்மல் குமார் கேட்கிறார், அவருக்கு வரலாறு தெரியாது.

வரலாற்றை மாற்ற பார்க்கும் இயக்கமாக இன்றைக்கு தமிழக வெற்றிக்கழகம் உள்ளது.

இதே நிலை நீடித்தால் இந்தியாவிற்கு சுதந்திரம் வாங்கித் தந்தது காந்தி கிடையாது. விஜய் தாத்தாவுக்கு தாத்தா என்று அவர்கள் ரீல்ஸ் போடுவார்கள். அதையும் மக்கள் நம்பக்கூடிய சூழ்நிலை ஏற்படும்.

அபாண்டமாக பேசுவதையே தொழிலாக தமிழக வெற்றி கழகத்தினர் வைத்துள்ளனர்.

உண்மையை ஒரு தடவையாவது பேசுவார்களா?

சட்டமன்றத்தில் எதிர்க்கட்சித் தலைவர் 15 குற்றச்சாட்டுகள் குறித்து கேள்வி கேட்டிருந்தார். அதற்கெல்லாம் முதலமைச்சர் பதில் கூறவில்லை.

யாராவது லஞ்சம் வாங்கினால் விஜய் மாமாவிடம் கூறி விடுவேன் என்று கூறுங்கள் என்று முதலமைச்சர் கூறினார். லஞ்சம் வாங்குவது குறித்து வெளியே கூறியவர்கள், அடுத்த நாள் அவர் உயிரோடு இல்லை, இருப்பது கிடையாது, இதுதான் இன்றைய நிலை.

தமிழகத்தில் தற்போது கடும் மின்வெட்டு ஏற்பட்டுள்ளது

இதைத் தீர்ப்பதற்கு முதல்வர் நடவடிக்கை எடுக்கவில்லை.

தமிழக முழுவதும் தற்போது ஒரு மணி நேரம் மின்வெட்டு என்று மறைமுகமாக அறிவித்து விட்டனர். இதை தமிழக அரசும் ஒத்துக்கொண்டு விட்டது போல் தான் செயல்பட்டு வருகிறது

விலைவாசி உயர்வு விண்ணை முட்டி விட்டது. இதே நிலை நீடித்தால் இந்தியாவிலேயே முதல்முறை யாக தமிழகத்தில் மக்கள் புரட்சி வெடிக்கும் நிலை ஏற்படும்.

அந்த புரட்சிதான் இந்த ஆட்சிக்கு முற்றுப்புள்ளி வைக்கப்போகிறது.

தி.மு.க. அரசு கார் பந்தயம் நடத்தியதை அப்போது தமிழக வெற்றிக் கழக தலைவர் விமர்சனம் செய்தார். ஆனால் தற்போது அவரே 400 கோடி ரூபாய் செலவில் கார் ரேஸ் நடத்துவதற்கு தனி மைதானம் அமைக்கப்படும் என்று கூறியுள்ளார்.

இந்தியாவிலேயே விளையாட்டுக்குரிய தலைநகரமாக தமிழகத்தை தி.மு.க. ஆட்சி கொண்டு வந்துள்ளது.

காலை உணவுத் திட்ட விழாவிற்கு ஆசிரியர்களே செலவு செய்ய வேண்டும் என்று தமிழக அரசு கூறிவிட்டதாக தகவல் வந்துள்ளது. இதன் மூலமாக ஆசிரியர்களை கேவலப்படுத்தி கொச்சைப்படுத்தும் விதமாக அரசு நடந்து கொண்டு வருகிறது

இரண்டு தொகுதி இடைத்தேர்தல் என்பது சாம்பிள்தான்.

தமிழகத்தில் நடைபெற்று வரும் எல்லா கருத்துகளையும் மக்களிடம் எடுத்து கூறுவோம்.

இரண்டு தேர்தலிலும் வன்னிய சமுதாய மக்கள் என்ன முடிவு எடுக்கிறார்களோ அதுதான் முடிவாக இருக்கும்.

சட்டத்துறை அமைச்சர் என்ற முறையில் கரூர் சம்பவத்தின் போது முதல் குற்றவாளியாக விஜயை சேர்க்க வேண்டும் என்று நான் முதல்வரிடம் மன்றாடினேன். ஆனால் மனிதாபிமான அடிப்படையில் அன்றைய முதல்வர் எங்களுடைய தலைவர் விஜய் மீது வழக்கு பதியாமல் விட்டுவிட்டார். இது எங்களுக்கு மிகப்பெரிய வருத்தமாகவும் உள்ளது.

கூட்டணிக் கட்சிகளை மதிக்கக்கூடிய தலைவர் தான் எங்களுடைய தலைவர்.

எங்களுடன் இருந்த விடுதலை சிறுத்தைகள் கட்சி வேறு, தற்போது விஜய் கூட்டணியில் உள்ள விடுதலை சிறுத்தை கட்சி வேறு.

கூட்டணியில் இருந்து வெளியேறியவுடன் எங்களை பாராட்ட மாட்டார்கள். அவதூறுதான் பேசுவார்கள். தற்போது அதுதான் திருமாவளவன் செய்துள்ளார்.

விடுதலை சிறுத்தைகள் தற்போது திருமாவளவனோடு உள்ளதா அல்லது விஜய்யுடன் உள்ளதா என்பதை அவர் கூற வேண்டும்.

வைகோ மற்றும் துரை வைகோ ஆகியோர் அரசியல் ஜோக்கர்ஸ்

சந்தர்ப்பவாத அரசியல்வாதிதான் இருவரும் என்று கூறினார்.



நாகர்கோவிலில் அமைந்துள்ள கன்னியாகுமரி கிழக்கு மாவட்டக் கழக அலுவலகத்தில் கழக மறுசீரமைப்புக்குழு மாவட்டச் செயற்குழுக் கூட்டம் மாவட்டக் கழகச் செயலாளர், முன்னாள் மேயர் மகேஷ் தலைமையில் நடைபெற்றது. இக்கூட்டத்தில் தலைமைக் கழகப் பிரதிநிதிகளாக விளாத்திகுளம் சட்டமன்ற உறுப்பினர் ஜீ. வி.மார்கண்டேயன், மாநில வர்த்தக அணி இணைச் செயலாளர், முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் மாலைராஜா உள்ளிட்ட கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

### சட்டமன்றத்தில் முதல்வர் ஆணவ பேச்சைக் கண்டித்து

# புதுக்கோட்டை வடக்கு, தெற்கு மாவட்ட தி.மு.க. சார்பில் மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம்!

### எஸ்,ரகுபதி - கே,கே,செல்லப்பாண்டியன்- சிவ,வீ,மெய்யநாதன் கண்டன உரை! பெரியண்ணன் அரசு - கவிச்சுடர் கவிதைப் பித்தன் – எம்,எம்,அப்துல்லா- டாக்டர் வை,முத்துராஜா – த,சந்திரசேகரன் பங்கேற்பு!



புதுக்கோட்டை, செப்.14-

கழகத் தலைவர் அனுபவித்த மிசா கொடுமையை சட்டமன்றத்தில் கொச்சைப்படுத்தி பேசிய முதல்வர் விஜய் அவர்களை கண்டித்து

புதுக்கோட்டை வடக்கு, தெற்கு மாவட்ட தி.மு.க. சார்பில் திலகர் திடலில் புதுக்கோட்டை தெற்கு மாவட்ட செயலாளர் முன்னாள் அமைச்சர் எஸ்.ரகுபதி எம்.எல்.ஏ, தலைமையில், வடக்கு மாவட்ட செயலாளர் கே.கே.செல்லப்பாண்டியன் வரவேற்புரையில், முன்னாள் அமைச்சர் சிவ.வீ.மெய்யநாதன் எம்.எல்.ஏ முன்னிலையில் மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. ஆர்ப்பாட்டத்தில்

பெரியண்ணன் அரசு, கவிச்சுடர் கவிதைப் பித்தன், எம்.எம்.அப்துல்லா, டாக்டர் வை.முத்துராஜா எம்.எல்.ஏ. உதயம் சண்முகம், வி.ஆர்.கார்த்திக் தொண்டைமான், த.சந்திரசேகரன், சுப.சரவணன், பரணிஇ.ஏ.கார்த்திகேயன்,

கே.ஆர்.என்.போஸ், செ.அசோக் பாண்டியன், அரு.வீரமணி, அ.சுப்பிரமணியன், எஸ்.எஸ்.கருப்பையா, க.மதியழகன், ஞான.இளங்கோவன், ஸ்ரீதேவி அண்ணாத்துரை, அடைக்கலம், கீரை.தமிழ்ராஜா, சு.சண்முகம், இரா.ஆனந்த், ஆர்.ஆர்.கே.கலைமணி, எஸ்.ஜெயராமன், வே.ராஜேஸ், க.ராஜேந்திரன், அ.அழகப்பன்,

கே.எஸ்.சந்திரன், மு.க.ராமகிருஷ்ணன், தென்னலூர் எம்.பழனியப்பன், எம்.பரமசிவம், மா.தமிழ் அய்யா, வெ.முத்துக் கிருஷ்ணன், என்.சேட்டு, ஓ.எஸ்.வெங்கடாச்சலம், மு.பி.ம.சத்தியசீலன், ஆர்.ஆர்.எஸ்.மாரிமுத்து, அ.இளங்குமரன், ஆர்.ஆர்.சாமிநாதன், கே.பி.அய்யப்பன், பொன்.கணேசன், பொன்.ராமலிங்கம், கே.பி.கே.டி.தங்கமணி, அரு.வடிவேல், அ.முத்து, அ.அடைக்கலமணி, அழகு சிதம்பரம், இரா.கணேசன வி.ஆர்.இளையராஜா, கே.எஸ்.ரவி, குமார்(எ) துரைக்கண்ணு, பேரூர் கழக செயலாளர்கள் பி.அண்ணாத்துரை, உமுருகேசன். கே.சி.சிவக்குமார், என்.சாத்தையா, எம்.செந்தில்குமார், ஆர்.செல்லத்துரை, த.மணிராஜன், கே.எம்.சுப்பிரமணியன், கலைவாணி சுப்பிரமணியன், ஆர்.வி.செல்வம், மாவட்ட அணிகளின் அமைப்பாளர்கள் அ.ரெத்தினம், செந்தாமரை பாலு, வி.ஜி.ஆர்.மணிவண்ணன், வி.என்.எம்.பாலு, டாக்டர் மு.க.முத்துக் கருப்பன், டாக்டர் சி.குறிஞ்சிவாணன், கவிவேந்தன், டி.எம்.ஆர்.ராமமூர்த்தி, சி.அரங்க நாயகம், அ.பிரபா, புத்தாம்பூர் எம்.சுப்பையா, தி.முத்து, பாத்திமா பீவி, சக்திவேல், சர்வேயர் நடேசன், ஆ.கலைச்செல்வன், எம்.ஜி (எ) ராமச்சந்திரன், ஹரி விமலாதி, எம்.எம்.பாலு, கருணாகரன், மு.கலியமூர்த்தி, எஸ்.வி.ஆர்.ஜெய் ஸ்டா லின், கே.ஆர்.ராமசாமி, முகம்மது ரபீக், விளாப்பட்டி சிவா, அருண் சேகர், இரா.தமிழ்ராசு, நசுருதீன், ராசி முருகானந்தம், மகேஸ்வரி சண்முகநாதன், மழையூர் ராமசாமி, எம்.பி.சரவணன், ஜெயலெட்சுமி தமிழ்ச்செல்வன், ஜெ.அஸ்ரப் அலி, ஆ.ராஜேந்திர சோழன், கே.எம்.கே.ரவிக்குமார், எம்.ஏ.எம்.இம்தியாஸ், டாக்டர் கே.என்.அமானுல்லா, வெற்றிச் செல்வன், சுப.துரைராஜா, உஷா செல்வம், வை. நடராஜன், மா.மணிவேலன், பால்ராஜ், சி.மதியழகன், பழனி தேவா, பழனிவேல, வடவாளம் க.செ.மணிமாறன், சுமோ பாலு, டி. அப்புக்காளை. செ.ரமேஷ், செ.கணேஷ், சுந்தர்ராஜ், ராஜ பெரியண்ணன்,

சொ.தமிழினியன், ராயல் சபா, பாரதி ராஜா, ஞானசேகரன், கே.வி.சுப்பையா, புதுநகர் குமார், மு.ராஜதுரை, ,தங்கமணி, ஜான் பீட்டர், முல்லை ரமேஷ், எழில் ராஜா, பாஸ்கர், பா.ஹரிகரன், சுகி, ஆலவயல் முரளி சுப்பையா, கோ.அண்ணா த்துரை, மேட்டுப்பட்டி சின்னத்துரை, அற்புத ஹென்றி, தட்சணா மூர்த்தி மற்றும்

புதுக்கோட்டை வடக்கு, தெற்கு மாவட்டத்தைச் சேர்ந்த நிர்வாகிகள் ஏராளமானோர் கலந்து கொண்டு சிறப்பித்தனர். முடிவில் புதுக்கோட்டை மாநகர பொறுப்பாளர் துணை மேயர் எம்.லியாகத் அலி நன்றி கூறினார்.